அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 18/2020

எனது இலக்கம் : EST/2/05/POL/0087
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2020.10.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

அரச அல்லது மாகாண அரச சேவையின் அலுவலர்களுக்கு ஏற்புடையதாக அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2014.01.21 ஆந் திகதிய 01/2014 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்குத் திருத்தங்களாக வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பேரில் அவதானத்தைக் கொண்டு வருகின்றேன். அதற்கமைய, 2019.10.03 ஆந் திகதிய 01/2014(VII) என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் தற்போதைக்கும் ஏனைய அரசகரும மொழித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலம் 2020.10.16 ஆந் திகதி வரை செல்லுபடியாகும் என்பதுடன், அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்புடையதாக, 01/2014 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்குத் திருத்தங்களாக இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள சகல சுற்றறிக்கைகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குப் பதிலாக 2020.10.16 ஆந் திகதியின் பின்னர் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும் என 2020.10.05 திகதி கூட்டப்பட்ட அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. பூரணப்படுத்தப்பட வேண்டிய மொழித்தேர்ச்சி மட்டத்திற்கமைய அரச அலுவலர்களின் வகைப்படுத்தல் மற்றும் விதித்துரைக்கப்பட்ட பாடநெறிகள்

2.1 அரச அலுவலர்கள் அரச கரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தான வகுதிகளை வகைப்படுத்தல் மற்றும் அவ்வவ் வகுதிகளுக்கு உரியதாகப் பூரணப்படுத்தப்பட வேண்டிய பாடநெறிகளின் கால எல்லைகள் கீழ் உள்ளவாறாகும்.

| **அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கமைய சேவைகள் மட்டம்** | **உரித்துடையதான வகுதி** | **பாடநெறிக்கான காலம்** |
|---|---|---|
| ஆரம்ப நிலை | 3 | 100 மணித்தியாலம் |
| இரண்டாம் நிலை | 2 | 150 மணித்தியாலம் |
| மூன்றாம் நிலை/சிரேஸ்ட | 1 | 200 மணித்தியாலம் |

2.2 மேற்படி சகல பாடநெறிகளின் பொருட்டு எழுத்து மற்றும் வாய்மொழி மூலம் ஆகிய இரு பகுதிகள் உள்ளடங்குதல் வேண்டும் என்பதுடன், பாடநெறிக் காலத்தினுள் தொடர்ச்சியான மதிப்பீட்டு முறையொன்றும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

2.3 அலுவலர் ஒருவர் தனது மொழித் தேர்ச்சித் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் பொருட்டு தனக்குரியதான மொழிப் பாடநெறியின் பொருட்டு ஆகக் குறைந்து 80% அல்லது அதற்குக் கூடிய வரவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.4 தற்போது சேவை ஆரம்ப பயிற்சி நடைபெறும் சகல பதவிகளினதும் சேவை ஆரம்ப பயிற்சியின் ஒரு பகுதியாக அவ்வப் பதவிகளுக்கு உரியதாக, மேற்படி 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடநெறிகளை உட்படுத்துவதற்கு உரிய நியமன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. மொழித் தேர்ச்சித் தேவைப்பாட்டைப் பூரணப்படுத்தல்

3.1 2007.07.01 ஆந் திகதி முதல் இச்சுற்றறிக்கை செல்லுபடியாகும் திகதி வரையில் திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை ஆகிய எந்தவொரு அடிப்படையிலும், புதிய பதவிக்குச் சேர்த்துக் கொள்ளளப்பட்டுள்ள, இதுவரையில் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாதுள்ள சகல அலுவலர்களும், தாம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரசகரும மொழியின் தேர்ச்சியை இச்சுற்றறிக்கை செல்லுபடியாகும் திகதி தொடக்கம் 03 வருடங்களுக்குள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

3.2 இச்சுற்றறிக்கை செல்லுபடியாகும் திகதி தொடக்கம் திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை அல்லது எந்தவொரு அடிப்படையிலும் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் சகல அலுவலர்களும் நியமனத் திகதி தொடக்கம் 03 வருடங்களினுள், தமக்குரிய ஏனைய அரச கரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். மேற்படி 3.1 மற்றும் இப்பிரிவின் படி, அத்தகைமைகளைப் பூரணப்படுத்துவதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள கால முடிவில், மொழித் தேர்ச்சியை பூரணப்படுத்தாதுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள ஏற்றம் விதித்துரைக்கப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்தி செய்யும் வரையில் நிறுத்தி வைக்கப்படும். உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் இணைந்து கொள்வதற்கு முன்னர் பூரணப்படுத்தியுள்ள ஏதேனும் மொழி தொடர்பான பாடநெறி, இச்சுற்றறிகையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் எனும் தேவைப்பாட்டின் பொருட்டு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படமாட்டாது.

3.3 இச்சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் திகதி தொடக்கம் திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை அல்லது எந்த அடிப்படையில் எனிலும் ஆங்கில மொழி மூலம் சேவையில் இணைத்துக் கொள்ளளப்பட்டுள்ள அலுவலர்களால் தாய் மொழி மற்றும் மற்றைய அரசகரும மொழி தொடர்பில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் ஏற்பாடுகள் உரித்துடையதாகும்.

(அ) ஆங்கில மொழி மூலம் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவரால், தான் சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் க.பொ.த. (சா.த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது நியமனத் திகதி தொடக்கம் 03 வருடங்கள் நிறைவுசெய்வதற்கு முன்னர், க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக தனது தாய் மொழியான சிங்களம் அல்லது தமிழ் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, இவ்விடயத்துக்கு மட்டும் விஷேடமான அரசகரும மொழித் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் சிங்கள/தமிழ் தாய் மொழி தொடர்பான சான்றிதழ்ப்பத்திர மட்டத்தின் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்

பேரில் அவ் அலுவலர்கள் தாய் மொழித் தேர்ச்சியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள் எனக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) மேலும் அவ்அலுவலர்களினால் ஏனைய அரச கரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக இச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல ஏற்பாடுகளையும் ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

3.4 இச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் திகதியாகும் போது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சியை பூரணப்படுத்தியுள்ள அலுவலர்கள் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய மீண்டும் ஏனைய அரசகரும மொழித்தேர்ச்சியைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையில்லை. அவர்கள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பூரணப்படுத்திய அலுவலர்களாக கருதப்படுகின்றார்கள்.

3.5 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் இச்சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் திகதி வரை திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை ஆகிய எந்தவொரு அடிப்படையிலாவது ஆங்கில மொழி மூலம் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள, இதுவரையில் தாய்மொழித் தேர்ச்சியையும் மற்றும் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியையும் பூரணப்படுத்தாதுள்ள அலுவலர்கள் இச்சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் திகதி தொடக்கம் 03 வருடங்களினுள் தாய்மொழித் தேர்ச்சியையும் மற்றும் ஏனைய அரச கரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இச்சுற்றறிக்கையின் 3.3 (அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.6 அலுவலரொருவரினால் தனக்குரிய மொழிப் பாடநெறியின் பொருட்டு விண்ணப்பித்து அதன் பொருட்டு கலந்துகொள்வதற்கு வேண்டப்படும் சந்தர்ப்பத்தில், அவ்அலுவலருக்குத் தேவையான விடுமுறையை உரிய நிறுவனத் தலைவரால் வழங்குதல் வேண்டும். விடுமுறையை அனுமதிக்கும் போது ஒவ்வொரு அலுவலராலும் அரச கரும மொழித் தேர்ச்சி பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதிகளின் முன்னுரிமை ஒழுங்கைக் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

## 04. அரசகரும மொழிகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் பொறுப்புக்கள்

4.1 சேவைகளுக்கு/பதவிகளுக்கு உரியவாறு தயாரிக்கப்படும் மேற்குறிப்பிட்ட 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துவதற்கான பொறுப்பை, அரசகரும மொழிகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் தேசிய மொழிகள் கற்கை மற்றும் பயிற்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கபடுவதுடன், பாடநெறியின் பாடத்திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்பு அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு உரியதாகும்.

4.2 அரச நிறுவனங்களில் கடமை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக மக்களுக்கான சேவைகளை வழங்குவதனை இலகுபடுத்தும் பொருட்டு அவ்வவ் சேவைகளுக்கு உரியதான சிங்கள/தமிழ் பேச்சு மொழிப் பாடநெறியினை அறிமுகப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய முழுமையான வழிகாட்டல்களை அரசகரும மொழிகளுக்குப் பொறுப்பான அமைச்சினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.3 இருமொழி/மும்மொழித் தேர்ச்சித் திறமையுள்ள அரச அலுவலர்களுக்குத் தமது மொழித் திறமைகளைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் உக்குவிப்புக்குத் தேவையான உத்திகள் மற்றும் சுற்றாடலை அடையாளம் காண்பதற்குத் தேவையான வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன அரசகரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

05. ஏனைய அரசகரும மொழிப் பாவனையை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய மொழித் தகைமை (National Language Qualification – NLQ) வருடாந்த மதிப்பீட்டுப் பரீட்சையை அறிமுகப்படுத்தல்.

5.1 அரச அலுவலர்களின் மொழித் தேர்ச்சித் திறன்களில் முறைசார் பிரயோகத்திற்காக வருடாந்தம் நடாத்தப்படும் **தேசிய மொழித் தகைமை (National Language Qualification – NLQ)** மதிப்பீட்டுப் பரீட்சையை அரசகரும மொழிகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் வழிகாட்டலின் கீழ் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் அரச சேவையின் பொருட்டு அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் பொது சேவைகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

5.1.1 நாடளாவிய மட்டத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்படடுள்ள இம் மதிப்பீட்டுப் பரீட்சை, சகல பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலர்களைப் போன்று, மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதன் பேரில் ஆர்வம் காட்டும் ஏனைய தரப்பினர்களினதும் மொழித் தேர்ச்சியை அளவிடும் பொருட்டு பயன்படுத்தப்படும் தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் பரீட்சையாகும் பொருட்டு ஏற்பாடுகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

5.1.2 அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கல்வித் தகைமை அல்லது சேவைகள் அல்லது பதவிகளை கருத்திற் கொள்ளாது, இத்தேசிய மொழித் தகைமைப் பரீட்சையில் சித்தியடையும் அரச அலுவலர்களின் பொருட்டு அவர்களினால் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு ஒரு தடவையில் மட்டும் ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குதல் வேண்டும்.

புள்ளிகள் 80 – 100 வரை - ரூபா. 25,000/-

புள்ளிகள் 65 – 79 வரை - ரூபா. 20,000/-

புள்ளிகள் 50 – 64 வரை - ரூபா. 15,000/-

இதற்கு மேலதிகமாக ஓய்வூதியமற்ற மேலதிக சம்பள ஏற்றம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

இவ்வாறு வழங்கப்படும் ஓய்வூதியமற்ற மேலதிக சம்பள ஏற்றத்தை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேசிய மொழித் தகைமையை மதிப்பிடும் பரிட்சையின் பொருட்டு 05 வருடங்களுக்கு ஒரு முறை தோற்றி 50 புள்ளிகளை விடக் கூடுதலாகப் பெற்றுக் கொள்ளல் கட்டாயமாகும்.

உத்தியோகத்தர் ஒருவருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முன்னைய தடவைகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் மட்டத்தினை விடக் கூடுதலான புள்ளிகள் மட்டத்தைப் கொண்டதன் பின்னர் ஆரம்பத்தில் கிடைக்கப் பெற்றுள்ள படி மற்றும் கூடுதலான புள்ளிகள் மட்டத்துக்கு உரித்தான படிகளுக்கிடையிலான வித்தியாசத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அலுவலர் ஒருவர் தனது

சேவைக் காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் கூடிய கொடுப்பனவு 25,000 ரூபாவாகும்.

அலுவலர் ஒருவர் முன்னைய சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகள் மட்டத்தை விடக் குறைந்த புள்ளிகள் மட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் காரணமாக ஆரம்பத்தில் வழங்கப்பட்ட கொடுப்பனவு எச்சந்தர்ப்பத்திலும் மீள அறவிடப்பட மாட்டாது.

06. ஒழுங்குபடுத்தற் குழு மற்றும் அதன் பணிப்பொறுப்புக்கள்

6.1 இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது எழும் பிரச்சினைகளுக்குரித்தான அமைச்சின் செயலாளரினால் அப் பிரச்சினைகள் தொடர்பான சுய பரிந்துரையுடன் பின்வரும் குழுவின் ஏற்பாட்டளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அப் பிரச்சினையுடன் தொடர்பான இறுதித் தீர்மானம் குழுவினால் எடுக்கப்படும்.

I. பொதுச் சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிகச் செயலாளர் ஒருவர் ( தலைவர்)
II. அரச கரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் ஒருவர்
III. கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் ஒருவர்
IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் சிரேஷ்ட அலுவலர் ஒருவர்
V. தாபனப் பணிப்பாளர் நாயகம் (ஏற்பாட்டாளர்)
VI. அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம்
VII. முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் ஒருவர்

6.2 2020.10.16 ஆந் திகதிக்கு முன்னர் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டுள்ள சிங்கள/தமிழ் பாடநெறியை ( ஆரம்ப, உயர், பேச்சு) பின்பற்றி உரிய எழுத்து மற்றும் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியெய்திய அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிங்கள/தமிழ் சான்றிதழ்ப் பத்திர பாடநெறி/உயர் பாடநெறியைப் பின்பற்றி அதில் சித்தியெய்திய அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தின் பொருட்டு ஏனைய மொழியாக சிங்களம்/தமிழ் மொழியைப் பின்பற்றியுள்ள அலுவலர்களுக்கு, தமது சான்றிழை அமைச்சின் செயலாளர் மூலம் மேற்படி குழுவிடம் சமர்ப்பித்து, இச்சுற்றறிகையில் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மொழித் தேர்ச்சித் தேவைப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளதா என வினவுவதற்கு இயலும்.

6.3 மொழித் தேர்ச்சிக்கு உரித்தான இப்புதிய ஏற்பாடுகளுக்குப் புறம்பாக ஏதேனும் மொழித் தேர்ச்சி சேவைக்கு/பதவிக்கு தேவையென நியமன அதிகாரி சிபாரிசு செய்வதாயின் அக்கோரிக்கையை மேற்குறிப்பிடப்பட்டுள்ள குழுவிடம் முன்வைத்து தீர்மானத்தைப் பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

07. மொழித் தேர்ச்சியை பூரணப்படுத்தும் பொருட்டு அலுவலர்களுக்கு வசதிகள் வழங்குதல்

மேற்குறிப்பிட்டுள்ள முறையில் உரிய மொழித் தேர்ச்சியை குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியினுள் பூரணப்படுத்தியுள்ள, ஆனால் தொடர்ந்தும் தனது மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கு ஆர்வம் காட்டும் அலுவலர்கள் அரசகரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் வழிகாட்டலின் பேரில் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்திற்கு ஏற்ப உரிய மொழித் தேர்ச்சி தொடர்பான அறிவை 05 வருடங்களுக்கு ஒரு தடவை புதுப்பித்துக் கொள்வதற்கான பாடநெறியில் கலந்து கொள்ளச் செய்வதற்கு நிறுவனத் தலைவர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இப் பாடநெறியைப் பின்பற்றும் அலுவலர்களின் பொருட்டு வாரத்தில் ஒரு நாளுக்கு மேற்படாதவாறு கடமை விடுமுறையை வழங்குவதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

08. இதுவயில் மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்வது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏற்பாடுகள்

8.1 தற்போது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கமைய எழுத்து மூலத் தேவைப்பாட்டினை மட்டும் பூரணப்படுத்தியுள்ள சகல அலுவலர்களின் பொருட்டும் அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாய்மொழித் தேவைப்பாட்டினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு எதிர்வரும் காலங்களில் ஒரு சந்தர்ப்பம் மட்டும் வழங்கப்படும். அதற்கமைய அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மூலம் அச்சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாய்மொழிப் பரீட்சை ஒரு தடவை மட்டும் நடாத்தப்படும். அவ்வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடையும் அலுவலர்களும் அவர்களுக்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூரணப்படுத்திய அலுவலர்களாகக் கருதப்படுவார்கள்.

8.2 தற்போது மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சின் பொருட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படும் 2007.02.09 ஆந் திகதிய 03/2007 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை, அதன் ஏற்பாடுகளுக்கமைய படிகளைப் பெறும் அலுவலர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்படும்.

8.3 இணைந்த மொழியான ஆங்கில மொழிக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவது தொடர்பாக தொடர்ந்தும் 1998.12.30 ஆந் திகதிய 29/98 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2004.06.23 ஆந் திகதிய 29/98(i) என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும்.

09. சகல ஆட்சேர்ப்பு திட்டங்களிலும் சேவை பிரமாணக் குறிப்புகளிலும் காட்டப்பட்டுள்ள ஏனைய அரசகரும மொழி தொடர்பான ஏற்பாடுகள் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமையத் திருத்தம் செய்யப்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு